## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தினால் தற்போது காணப்படும் குத்தகை சொத்துக்களுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 16 இனை பயன்படுத்தி இருப்பதன் மூலம் ஏற்படக் கூடிய தாக்கத்தினை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக் களில் வெளிப்படுத்தியிருக்க வில்லை. | குறிப்பிட்ட குத்தகை சொத்துக்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக தற்போது கலந்துரையாடல் மேற் கொள்ளப்படுவதனால் இதனை நிதிக்கூற்றுக்களில் காட்ட முடியாதுள்ளது. | நியமத்தின் ஏற்பாடுகளின் படி குத்தகை சொத்து களுக்கான தாக்கம் பற்றி பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இல் 26(a) பந்தியின் படி ஓய்வூதிய நலன் பொறுப்புக் களுக்காக பிற்போடப்பட்ட வரி கணிப்பீட்டின் போது கணக்கீட்டு அடிப்படையை தீர்மானிக்கும் பொது நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ஓய்வூதிய நலன் பொறுப்புக்களில் ஞாபகப் பெறுமதி ரூபா 232,428,448 தொகை எனினும், அகழ்விரிவான வருமானக் கூற்றுடன் சீராக்கல் மேற் கொள்ளப்பட்ட ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடுகள் ரூபா 85,040,305 தொகை எனக் காட்டப்பட்டிருந்தது. இது தவிர வரி அடிப்படை பூச்சியமாகக் காணப்பட வேண்டியிருந்த போதிலும், ஓய்வூதிய நலன் பொறுப்புக்களின் வரி அடிப்படை என ரூபா 50,416,830 தொகை பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும் ஆண்டிற்கான ஆயுற்கால நட்டம் ஆகிய ரூபா 56,569,495 இற்கான உரிய பிற்போடப்பட்ட வரிப் பெறுமதி ரூபா 15,839,459 தொகை ஏனைய அகழ்விரிவான வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். அது அடுத்த வருடம் சரிசெய்யப்படும். | நியமத்தின் ஏற்பாடுகளின் படி ஓய்வூதிய நலன் பொறுப்புக்காக பிற்போடப் பட்ட வரி கணிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் படி 2018 ஆம் ஆண்டிற்கான கழிவு விகிதாசாரம் என இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டிருந்த வாரத்தின் பொருளியல் சுட்டியை அடிப்படையாகக் கொண்டு 11.88 சதவீதம் என தீர்மானிக்கப்பட்டு இருந்ததுடன், அந்த விகிதாசாரம் 2019 ஆம் ஆண்டிலும் பயன்படுத்தி இருந்த போதிலும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப் பட்டிருந்த 2019 திசெம்பர் 27 ஆந் திகதியில் முடிவடையும் வாரத்தின் பொருளாதார சுட்டியின் படி திறைசேரி பிணைமுறிகளுக்காக சந்தை விளைவு விகிதாசாரம் 8.64 சதவீதத்தில் இருந்து 10.54 சதவீதம் வரை பெறுமதி ஒன்று காணப்பட்டது. நியமத்தின் பந்தி இலக்கம் 84 இன் படி கழிவு விகிதாசாரம் ஓய்வூதிய நலன் பொறுப்புக்களின் மீது பொருண்மையான தாக்கம் ஒன்றினை ஏற்படுத்துவதுடன் தற்போதைய சந்தை விகிதாசாரம் தொடர்பாக முறையான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படாமல் கடந்த வருடத்தின் கழிவு விகிதாசாரத் தினையே மீளாய்வாண்டிற்காக வும் பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள ஆண்டிற்கான திறைசேரி பிணை முறிக்குரிய சந்தை விளைவு விகிதாசாரத்தினை கழிவுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் 30 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்ந்தும் எதிர்பாரா பொறுப்புக்கள் அல்லாத நட்டஈட்டு வழக்குகளுக்கான கொடுப்பனவு ரூபா 11,783,507 தொகை மீண்டும் வகைப்படுத்தப்பட்டு ஏனைய பொறுப்புக்கள் என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். அடுத்த வருடம் சரிசெய்யப்படும். | நட்டஈட்டு வழக்குகளுக்கான கொடுப்பனவுகள் மீண்டும் வகைப்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிற்போடப்பட்ட வரி கணிப்பீட்டின் போது 2018, 2019 ஆண்டுகளின் போது கணக்காய்விற்கு சமர்ப்பிக் கப்பட்டிருந்த அட்டவணைகள் மற்றும் அவ் ஆண்டுகளின் நிதி நிலைமைக் கூற்றில் தரவு மீது அடிப்படையாகக் கொண்டு 2019 ஆம் ஆண்டிற்கான பிற்போடப் பட்ட வரி பொறுப்பு சுயமாக கணிக்கும் போது வருட இறுதியில் உள்ளவாறு தேறிய பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பில் ரூபா 318,240,140 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வரிக் கணிப்பீடு சரியாக மேற்கொள்ளப்பட்டு உரிய முறையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் பேணப் பட்டு வரும் இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பாக வங்கி மேலதிகப்பற்று மீதி முறையே ரூபா 36,746,228 தொகை மற்றும் ரூபா 179,751 தொகை, நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்கள் என வேறாக காட்டப்படுவதற்கு பதிலாக வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் உட்படுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். அடுத்த வருடம் சரிசெய்யப்படும். | வங்கி மேலதிகப் பற்று மீதிகள் நிதிக்கூற்றுக்களில் வேறாகக் காட்டப்பட வேண்டும். |
| (இ) | இந்தியன் ரூபா 676,658 தொகைக்கான சென்னை வங்கிக் கணக்கு மீதியின் மீது ரூபா 44,998 தொகைக்கான வெளிநாட்டுச் செலாவணி நட்டத்தினை இனங்கண்டிருக்காமையால் அப் பெறுமதியினால் வங்கி மீதி மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக் களுடன் இணங்குகின்றேன். | மீதிகளை சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கணினி மென்பொருள் மற்றும் கட்டிடத்திற்காக முறையே ரூபா 886,166 தொகை மற்றும் ரூபா 67,864 தொகை குறைவாக பெறுமானத்தேய்வு கணிக்கப்பட்டு இருந்தமையால் மீளாய்வாண்டிற் கான நட்டம் ரூபா 954,030 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆண்டின் போது மென்பொருள் பெறுமானத்தேய்வு சரிசெய்யப்பட்டது. கட்டிட பெறுமானத்தேய்விற்கான கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | சொத்துக்களுக்கான மீதிகள் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | ஓய்வூதிய நலன் பொறுப்புக் களுள் வட்டிக் கிரயங்களின் பெறுமதி ரூபா 23,499,231 தொகை, நிதிக் கூற்றுக்களில் ரூபா 19,095,278 தொகை என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் ஓய்வூதியப் பொறுப்பு வட்டிக் கிரயம் ரூபா 4,403,953 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இதனை அடுத்த வருடம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதியப் பொறுப்புக்களின் வட்டிக் கிரயத்தின் பெறுமதியை சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தடுத்து வைக்கப்பட்ட நட்டத்தின் இறுதி மீதி ரூபா 94,949,639 தொகை எனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றின் ஆரம்ப மீதி பூச்சியம் எனக் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானதாகும். அடுத்த வருடம் சரிசெய்யப்படும். | தடுத்து வைக்கப்பட்ட நட்ட மீதி நிதிக்கூற்றுக் களில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2018 ஆண்டிற்கான இருப்புக் கணக்கீட்டின் போது இனங்காணப்பட்ட ரூபா 1,430,845 தொகை பெறுமதியான அப்புறப்படுத்தப்பட வேண்டிய இறுவெட்டுக்கள், கெஸட் மற்றும் சஞ்சிகை இருப்பு அப்புறப்படுத்தும் வரை பாவணைக்கு பொருத்தமற்ற இருப்புக்கள் என காட்டுவதற்கு பதிலாக இருப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | இவை 2020 ஆண்டின் போது செலவு ஒன்றென காட்டப்படும். | இறுதி இருப்புக்களின் பெறுமதியினை சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உறுதிப் படுத்தல்களின் படி 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹுன்னஸ்கிரிய ஒலிபரப்பு நிலைய வளவு தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய மொத்த குத்தகை ரூபா 12,305,708 தொகை எனினும், செலுத்த வேண்டிய குத்தகை என ரூபா 1,215,000 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் செலுத்த | எதிர்காலத்தில் அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்துடன் கலந்துரையாடி கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செலுத்தவேண்டிய குத்தகை பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சரியாகக் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய குத்தகை ரூபா 11,090,708 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | ஒலிபரப்பு நிலையம் ஒன்று நடாத்தி செல்வதற்காக 2009 ஆம் ஆண்டின் போது நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட குச்சவெளி பிரதேச செயலக வட்டாரத்தில் அமைந்துள்ள சுமார் 119.5309 ஹெக்டயர் அளவுடைய காணிக்காக செலுத்த வேண்டிய குத்தகை ரூபா 124,344,000 தொகை 2019 திசெம்பர் 31 திகதி வரையும் கணக்கீடு செய்திருக்கவில்லை. | இந்த குத்தகைத் தொகையை அகற்றுவதற்காக அமைச்சரவை குறிப்பொன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதன்படி எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும் . | செலுத்த வேண்டிய குத்தகைப் பெறுமதி சரியாக காட்டப்பட வேண்டும். |
| (ஒ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புறக்கணிக்கப் பட்ட வரிகளை அறவீடு செய்யும் அலகின் அறிக்கை மற்றும் கூட்டுத்தாபனத்தின் வரி செலுத்துதல் தொடர்பான வரிக் கணக்கின் படி 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த வரிப் பொறுப்புக்கள் (தண்டப்பணம் இன்றி) ரூபா 199,616,562 தொகை எனினும் நிதி நிலைமைக் கூற்றில் நிதி அல்லாத பொறுப்புக்களின் கீழ் அது ரூபா 106,891,027 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் செலுத்த வேண்டிய நிலுவை வரியின் பெறுமதி ரூபா 92,725,535 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இந்த ரூபா 92,725,535 இற்கான வித்தியாசத்தை எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | செலுத்த வேண்டிய வரியின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் சரியாக காட்டப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| (அ) | ஒலிபரப்பு நேர கடன்பட்டோர் | 231,611,659 | 231,733,058 | 121,399 | கணக்காய்வு அவதானிப்புக் களுடன் இணங்குகின்றேன். | வித்தியாசத்துக் கான காரணத்தை இனங்கண்டு அம் மீதிகளைச் சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய வைப்புக்கள் | 9,452,462 | 9,032,782 | 419,680 | கணக்காய்வு அவதானிப்புக் களுடன் இணங்குகின்றேன். | வித்தியாசத்துக் கான காரணத்தை இனங்கண்டு அம் மீதிகளை சரி செய்ய வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | ஒலிபரப்பு நேர கடன்கொடுத் தோர் | 14,601,069 | 13,924,704 | 676,365 | அவதானிப்புக் களுக்கு இணங்கு கின்றேன். அடுத்த வருடம் சரிசெய்யப் படும். | வித்தியாசத்திற் கான காரணத்தை இனங்கண்டு அம் மீதிகளை சரி செய்ய வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | | | |
| (அ) | செலவுகள் | 856,253 | கொடுப்பனவு உறுதிச்சான்றுகள் | கணக்காய்வு அவதானிப்புக் களுடன் இணங்குகின்றேன். | அனைத்து உறுதிச் சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டிடங்கள் | 193,700,207 | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பௌதீக உறுதிப்படுத்தல் அறிக்கைகள் | கணக்காய்வு அவதானிப்புக் களுடன் இணங்குகின்றேன். | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் பௌதீக உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு பதிவுகள் பேணப்பட வேண்டும். |
| (இ) | காணிகள் | 7,761,326 | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பௌதீக உறுதிப்படுத்தல் அறிக்கைகள் | கணக்காய்வு அவதானிப்புக் களுடன் இணங்குகின்றேன். | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் பௌதீக உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு பதிவுகள் பேணப்பட வேண்டும். |
| (ஈ) | லக்ஹன்ட கிளை வியாபாரக் கடன்பட்டோர் | 12,807,802 | ஆவணக் கோப்பு விபரங்கள் மற்றும் விரிவான அட்டவணைகள் | கணக்காய்வு அவதானிப்புக் களுடன் இணங்குகின்றேன். | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக ஆவணங்கள் காணப்படாத மீதிகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். |
| (உ) | இலங்கை வங்கி சென்னை வங்கிக் கணக்கு மீதி (இந்தியன் ரூபா 676,658) | 1,768,243 | மீதிகளை உறுதிப் படுத்தல்கள் | கணக்காய்வு அவதானிப்புக் களுடன் இணங்குகின்றேன். | மீதிகளை உறுதிப் படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஊ) | வியாபாரக் கடன்பட்டோர் | 69,500,324 | மீதிகளை உறுதிப் படுத்தல்கள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானது. | மீதிகளை உறுதிப் படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1986 ஆம் ஆண்டு முதல் காணப்படும் 32 வருடங்களை விட பழமை வாய்ந்த, பதவியணிக்காக மிகையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 238,952 இற்கான ஊழியர் சேமலாபநிதி பங்களிப்புத் தொகை 2020 ஜூலை 23 திகதி வரையும் அறவீடு செய்யப்படாமல் முன் கொண்டுவந்து காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 449,415 தொகைக்கான முற்பணங்கள் 2019 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்யப்படாமல் வியாபார கடன்பட்டோர் என காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த முற்பணங்களை தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 02 வருடங்கள் முதல் 19 வருடங்கள் வரை பழமைவாய்ந்த பெற வேண்டிய பலவின வருமானங்கள், பெற வேண்டிய மின்சாரக் கட்டணம் மற்றும் பலவின கடன்பட்டோர் என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா 29,753,026 தொகையினை அறவீடு செய்வதற்காக 2019 திசெம்பர் 31 திகதி வரை கூட்டுத்தாபனத் தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | பெற வேண்டிய வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 10 வருடங்களை விட பழமை வாய்ந்த ரூபா 61,163,788 தொகையான வெளிநாட்டு கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 29,965,096 இற்கான உள்நாட்டு கடன்பட்டோர் மீதி என்பவற்றை அறவீடு செய்வதற்காக 2019 திசெம்பர் 31 திகதி வரை கூட்டுத்தாபனத் தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவீடு செய்யும் அலுவல்களை புறக்கணிக்கும் உத்தியோகத் தர்களுக்கு எதிராக செயற்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொலை தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு செலுத்தப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 149,420,035 தொகைக்கான மீதி 1981 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை அதாவது 38 வருட காலம் முதல் தீர்க்கப்படாமல் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. 2016 ஆண்டு முதல் தற்காலம் வரை பொறுப்புக்கள் உரிய முறையில் தீர்க்கப்பட்டுள்ளன. | நீண்டகாலமாக காணப்படும் அட்டுறு செலவு மீதிகளுக்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்யப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | பொது நிதிச் சுற்றறிக்கை 03/2015 மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2) (ஆ) மற்றும் 371(5) | கூட்டுத்தொகை ரூபா 1,206,006 தொகைக்கான கட்டுநிதிகள் பெற்று 33 நாட்கள் முதல் 14 வருடங்கள் வரை தாமதம் காணப்பட்ட போதிலும் 2019 திசெம்பர் 31 வரை தீர்க்கப்பட்டி ருக்கவில்லை. மேலும் ஏதேனும் விஷேட கருமம் ஒன்றிற்காக சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர் களுக்கு ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 உச்ச அளவு வரை வேளைக்கேற்ற கட்டுநிதி வழங்க முடியும் எனினும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வரையறையை மிகைத்து 14 சந்தர்ப்பங் களில் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் கூட்டுத்தொகை ரூபா 538,850 இற்கான முற்பணங்கள் 27 நாட்கள் முதல் 567 நாட்கள் வரை தாமதம் அடைந்து இருந்ததுடன் 2019 திசெம்பர் 31 திகதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானவை. | சுற்றறிக்கை அறிவுரையின் பிரகாரம் குறிப்பிட்ட வேளைக்கேற்ற விடயத்துக்கான கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2015 மே 05 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 1/2015 பந்தி 3.1 | கூட்டுத்தாபன உத்தியோ கத்தர் 04 பேருக்காக ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்களுக்காக 2019 ஆண்டின் போது மற்றும் 2020 ஜுன் வரையான காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த எரிபொருள் வரையறையை மிகைத்து பெற்றிருந்த மேலதிக எரிபொருளுக்காக ரூபா 1,323,456 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவற்றில் 2019 ஏப்ரல், ஜுன், ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் மற்றும் 2020 ஜனவரி மாதத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 553,574 இற்கான செலவுகளுக்காக மாத்திரம் பணிப்பாளர் சபையின் அணவல் அங்கீகாரம் பெறப்பட்டி ருந்தது. மேலும் 2020 பெப்ரவரி முதல் ஜுன் வரை கூட்டுத்தாபனத்தின் தலைவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த வாகனத்திற்குரிய மாதாந்த எரிபொருள் வரையறையை மிகைத்து எரிபொருளுக்காக ரூபா 95,763 தொகை செலவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியான செய்முறை ஒன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். தற்போது சரியான செய்முறை ஒன்றினை கடைபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது. | எரிபொருள் வரையறை தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2015 மே 05 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 1/2015 பந்தி 3.3 மற்றும் 2016 மார்ச் 09 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 05/2016 இன் 02 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகன ங்களுக்கு உரித்துள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு அந்த உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்துதல் அல்லது உத்தியோகபூர்வ வாகனத்துக்கு பதிலாக மாதாந்தம் போக்குவரத்து படியாக ரூபா 50,000 மற்றும் குறிப்பிட்ட பதவிக்குரிய மாதாந்த எரிபொருள் படி பெற்றுக் கொள்ளல் ஆகிய இரண்டு மாற்றீடுகளில் ஒன்றினை தெரிவு செய்வதற்கு முடியுமாக இருந்த போதிலும் அதனை கவனத்தில் எடுக்காமல் தலைவருக்கு 2020 பெப்ரவரி மாதம் முதல் உத்தியோகபூர்வ வாகனம் | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். எதிர்காலத்தில் சரியான செய்முறை ஒன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் கொடுப்பனவு அல்லது ஒதுக்கப்பட்ட வாகனம் ஒன்று வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஏப்ரல் முதல் ஜூலை வரையான காலப்பகுதிக்காக போக்குவரத்துப் படியாக ரூபா 200,000 மற்றும் எரிபொருள் கொடுப்பன வாக ரூபா 93,160 தொகை செலுத்தப்பட்டி ருந்தது. | | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 110 | கூட்டுத்தானத்தினால் மீளாய்வாண்டிற்கா சேதங்கள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட்டு வந்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வர வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 396(ஈ) (ii) மற்றும் (iii) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செல்லுபடியாகும் காலம் 6 மாதங்களை மிகைத் துள்ள ஆனால் கொடுப்பனவுக்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப் படாத ரூபா 277,986 தொகை பெறுமதியான 60 காசோலைகள் தொடர்பாக பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். | காலவதியான காசோலைகள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பதவிநிலை அறிவித்தல் இலக்கம்:<br>எஸ்.எல்.பீ.சீ/3142 இன் 4 ஆம் பிரிவு | 2019 திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்க்கப் படாமல் காணப்பட்ட முற்பணங்களில் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப் பட்டிருந்த முற்பணம் தீர்க்கப்படாத சந்தர்ப்பத்தில் மீண்டும் அதே உத்தியோக த்தருக்கு முற்பணம் செலுத்தியிருந்த 10 சந்தர்பங்கள் அவதானிக் கப்பட்டன. அதன் படி ஆண்டுபூராகவும் 10 உத்தியோகத்தர்களிடம் தேங்கியிருந்த பணம் ரூபா 1,476,171 தொகை ஆகும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. | பதவிநிலை அறிவித்தலின் பிரகாரம் ஒரு முற்பணம் தீர்க்கப்பட்ட பின்னர் மாத்திரம் அவ் உத்தியோக த்தருக்கு முற்பணம் வழங்கப்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் வங்கி ஒன்றில் கூட்டுத்தாபனத்திற்குரிய நடைமுறைக் கணக்கு ஒன்றில் ரூபா 3,244,526 தொகை மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டமையால் அப் பணத்தை வட்டி கிடைக்கக் கூடிய கணக்கு ஒன்றில் வைப்புச் செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த வட்டி வருமானத்தை இழந்துள்ளது. | அவசர சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக தடுத்து வைக்கப்பட்டது. | வட்டி வருமானம் கிடைக்கக் கூடியவாறு வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்து பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 104,863,956 இற்கான நட்டம் ஒன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 42,670,112 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 62,193,844 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஆயுற்கால நட்டம் முன்னைய ஆண்டை விட 754 சதவீதத்தினால் அதாவது ரூபா 65,222,761 இனால் அதிகரித்தல் மற்றும் நிதிச் செலவுகள் 37 சதவீதத்தினால் அதாவது ரூபா 1,100,710 தொகையினால் அதிகரித்தல் முக்கியமாக காரணமான இருந்தது.

### 2.2 வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

(அ) கடந்த 4 வருடங்களின் நிதி தரவுகளின் படி கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்புக் கால வருமானம் 2017 ஆண்டு வரை முன்னேற்றம் ஒன்று காட்டியிருந்த போதிலும் 2018 ஆண்டின் போது அது 5 சதவீத தொகையினால் வீழ்ச்சியடைந்திருந்தது. மீண்டும் 2019 ஆண்டின் போது முன்னேற்றம் ஒன்று காட்டியிருந்த போதிலும் அது கணிசமான மட்டத்தில் நெருங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இவ்வருமான முன்னேற்றத்திற்காக 2018 ஆண்டின் போது வீழ்ச்சியடைந்திருந்த திருகோணமலை ஒலிபரப்பு நிலைய ஒலிபரப்புக் கால வருமானம் மீண்டும் உரிய நிலையினை அடைந்திருந்தமை காரணமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. ஏனைய செயற்பாட்டு வருமானம் 2018 ஆண்டிற்கு ஒப்பாக 7 சதவீதத்தினால் முன்னேற்றம் அடைந்திருந்தது.

(ஆ) கடந்த 4 வருடங்களின் தரவுகளின் படி கூட்டுத்தாபத்தின் நிர்வாகச் செலவுகள் 2018 ஆண்டிற்கு ஒப்பாக 2 சதவீத அளவினால் அதிகரித்திருந்த போதிலும் அது 2018 ஆண்டில் நிர்வாக செலவில் ஏற்பட்டிருந்த அதிகரிப்பினை விட மிகவும் குறைந்த பெறுமதி என அவதானிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு செலவுகளும் 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 3 சதவீத அளவினால் அதிகரித்திருந்ததுடன் நிதிச் செலவுகள் 2018 ஆம் ஆண்டை விட 37 சதவீத அளவினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதாசாரம் மற்றும் திடீர் விகிதாசாரத்தில் வீழ்ச்சி ஒன்று காட்டப்படுவதுடன், அதன் படி குறுகிய கால நிதி வலுவில் வீழ்ச்சி ஒன்று பிரதிபழிக்கின்றது. மேலும் நடைமுறை சொத்துக்களில் அடங்கியுள்ள கடன்பட்டோரில் 2 வருடங்கள் முதல் 44 வருடங்கள் வரை பழமையான உள்நாட்டு கடன்பட்டோர் மீது ரூபா 47,332,106 தொகை மற்றும் வெளிநாட்டுக் கடன்பட்டோர்

மீதி ரூபா 62,865,830 தொகை அடங்கியிருந்தமையால் கடனை அறவீடு செய்யும் இயலுமை மற்றும் திரவத்தன்மை காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மொத்த இலாப விகிதாசாரம் 4.33 இல் இருந்து 2.31 வரை குறைந்திருந்ததுடன் விற்பனைக் கிரயத்தில் ரூபா 14,619,181 இற்கான அதிகரிப்பு இதற்கு முக்கியமான காரணமாக இருந்தது. மேலும் தேறிய இலாப விகிதாசாரம் - 7.79 இல் இருந்து - 7.32 வரை மிகவும் சிறு முன்னேற்றம் ஒன்றினை காட்டியிருந்த போதிலும் மேலும் வரியின் பின்னர் இலாபம் ரூபா 48,294,461 தொகையாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்தவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் செவிமடுத்தல் வளத்தினை டிஜிடல் பாதுகாப்பு செய்யப்பட்ட தர களஞ்சியப்படுத் தலுக்காக 2017 ஆண்டு முதல் கொரியா உதவியுடன் பெற்றிருந்த கொரியா சேவையகம் (Server) பயன்படுத்தப்படுவதுடன் அதற்காக டிஜிடல் பாதுகாக்கப்பட்ட ''பாடல்கள்'' மாத்திரம் களஞ்சியப் படுத்தப்பட்ட போதிலும் ''நிகழ்ச்சித் திட்டங்கள்'' களஞ்சி யப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கூட்டுத்தாபனம் எதிர்பார்த்த குறிக்கோளினை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாததுடன் குறிப்பிட்ட கொரியா நிறுவனத்துடன் நிகழ்வு நிலை உத்தரவு (Online Command) மூலம் தொடர்பு கொண்டு நிகழ்ச்சித் திட்டங்களை நாளதுவரை ஆக்குவதற்கு 2017 ஒக்தோபர் முதல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கூடிய விரைவில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிகழ்சித் திட்டங்களை பாதுகாக்கக் கூடிய விதமாக குறிப்பிட்ட சேவையகத்தை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான விளைவற்றுக் காணப்படும் கட்டிடங்களின் தரையளவு 1126.45 சதுர மீற்றர்களாக காணப்பட்ட துடன் அக் கட்டிடங்களை அபிவிருத்தி செய்து பயன்தரக் கூடிய கருமங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு முடியுமாக இருந்த போதிலும் கூட்டுத்தாபன த்தினால் உரிய பராமரிப்பு இன்றி நீண்டகாலமாக காணப்படுவதினால் கட்டிடங்கள் அழிவுநிலையை அடையும் சூழ்நிலை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு இணங்குகின்றேன். இந்த இடப்பகுதியில் புதிய அரங்கு ஒன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தாமதமின்றி குறிப்பிட்ட கட்டிடங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 6 வாகனங்கள் 6 மாதங்கள் முதல் 3 வருடங்கள் வரையான காலம் விளைவற்றுக் காணப் படுவதுடன் அவ்வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 4 வாகனங்கள் அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் 2 வருடங்களை விட மிகையான காலம் தாமதம் அடைந்திருந்தது. | கூட்டுத்தாபனத்தின் சபைக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. முதலாம் தடவை கலந்துரையாடப் பட்டு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் இரண்டாம் தடைவ கலந்துரையாடலுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அப்புறப்படுத்த வேண்டிய வாகனங்கள் அப்புறப்படுத்துதல் தாமதம் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் அடங்கியுள்ள செயற் திட்டங்களில் அத்தியவசியமாக நிறைவேற்றப்பட வேண்டிய ரூபா 38.95 மில்லின் தொகைக்கான 05 செயற்திட்டங்கள் 2020 செப்தெம்பர் 25 திகதி அளவிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் படி மூலதன ஏற்பாடுகள் என கிடைத்து வங்கியில் இடப்பட்டிருந்த தொகை ரூபா 75 மில்லியன் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 63.5 மில்லியன் தொகை 2015 ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தை புனர்நிர்மாணம் செய்வதற்காக திறைசேரியில் இருந்து கிடைத்திருந்தது. | 2020 இறுதி அளவில் இந்த புனர்நிர்மாண அலுவல்கள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. | மூலதன ஏற்பாடுகள் உச்சமட்ட அளவில் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் மூலதன ஏற்பாடுகள் சேமிக்கப்படின் திறைசேரிக்கு திருப்பி ஒப்படைக்க வேண்டும். |
| (ஆ) | யாழ்ப்பாணம் யாழ் (FM) எப்.எம் சேவைக்காக ஒலிப்பதிவுக் கூடத் தொகுதி ஒன்று நிர்மாணிப்பதற் காக 2018 ஆண்டின் பெறுகைத் திட்டத்தில் ரூபா 42.50 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டளவில் அவ் ஏற்பாடுகள் ரூபா 28 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்ததுடன், கட்டிடம் நிர்மாணத்திற்கு உரிய காணி 2019 ஆம் ஆண்டு இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணத்தினால் மீளாய்வாண்டு அளவிலும் இங்கு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்காததுடன் கட்டிட நிர்மாண வேலை ஒப்பந்தத்துக்கு உரிய அளவை பத்திரம் மற்றும் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2020 செப்தெம்பர் 15 அளவில் 02 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்தது. | காணியை பெற்றுக் கொள்வதற்காக தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட காணியை கூடிய விரைவில் தீர்த்து கட்டிடத்தின் நிர்மாண வேலை விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |